2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இந்த ஆண்டே நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

போக்குவரத்துப் பணிமனை

***10251—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கயத்தாறில் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான கோவில்பட்டியிலேயே ஒரு பணிமனை இருக்கிறது. அவருடைய கோவில்பட்டி தொகுதிக்கு அருகிலே பல பணிமனைகள் இருக்கின்ற காரணத்தினால், கயத்தாறில் புதிய பணிமனை அமைக்க வேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, கோவில்பட்டியில் ஒரு பணிமனை இருக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக நான்குவழிச் சாலையிலே பிரதான நகரமாக கயத்தாறு இருக்கின்றது. அதற்கு 32 கிலோ மீட்டர் தொலைவில் திருநெல்வேலியிலே 4 போக்குவரத்துப் பணிமனைகள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த 4 போக்குவரத்துப்*

[2023 ஏப்ரல் 13

பணிமனைகளும் திருநெல்வேலி மாவட்டத்திற்குண்டான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணிமனைகளே தவிர, தூத்துக்குடி மாவட்டத்திற்கோ, கோவில்பட்டி தொகுதிக்கோ அந்தப் பணிமனைகள் பயன்படாது.

கயத்தாறு புதியதாக உருவாக்கப்பட்ட வட்டம். ஒரு வட்டத்தின் தலைநகராக இருக்கின்றது. பல revenue கிராமங்களையும், ஒன்றரை ஒன்றியத்தையும் உள்ளடக்கிய கயத்தாறு பேரூராட்சி வளர்ந்து வருகிறது என்பதால், அவசியம் கருதி, புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ராஜூ அவர்கள் குறிப்பிடுவதுபோல, அடுத்த மாவட்டத்திலே, பக்கத்திலே, திருநெல்வேலியிலே 3 பணிமனைகள் இருப்பதைக் குறிப்பிடுகிறார். அவருடைய, கோவில்பட்டி தொகுதி இருக்கின்ற தூத்துக்குடி மாவட்டத்திலே 7 பணிமனைகள் இருக்கின்றன. பக்கத்து மாவட்டமாக இருந்தாலும், திருநெல்வேலியிருந்து கயத்தாறு பகுதிகளுக்கு பல்வேறு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோல, பொதுமக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, கயத்தாறை கடந்து செல்கின்ற நீண்டதூர பயண பேருந்துகள் அங்கேயிருக்கின்ற tollgate-க்கு அருகே நிறுத்துவதற்கு ஒரு stopping ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுவதற்குப் போதுமான பேருந்து வசதி இருக்கிறது. எனவே, அங்கே பேருந்து பணிமனை அமைக்க வேண்டிய தேவை தற்போதைக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னதைப்போல கயத்தாறு புதிதாக உருவாக்கப்பட்ட வட்டம். அதுமட்டுமல்ல, கோவில்பட்டி தொகுதி, விளாத்திகுளம் தொகுதி ஆகிய இரண்டு தொகுதிகளுக்கும்

2023 ஏப்ரல் 13]

சேர்த்து இரண்டே பணிமனைகள், கோவில்பட்டியில் ஒன்றும், விளாத்திகுளம் தொகுதியில் ஒன்றும் இருக்கின்றன. கூடுதலாக ஒரு பணிமனை வந்தால்தான் அந்தப் பகுதியினுடைய போக்குவரத்து வசதிகளை நிறைவு செய்யும்வண்ணமாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, கோவில்பட்டி பணிமனையில் கிட்டத்தட்ட 64 பேருந்துகள் இருக்கின்றன. 64 பேருந்துகளில், கிட்டத்தட்ட 15-க்கும் மேற்பட்ட பேருந்துகள் பயன்படுத்த முடியாத நிலையிலே இருக்கின்றன. கடந்த 21-10-2022 அன்று பேருந்து நிலையத்திலிருந்து வெளிவருகின்ற bus*-ன்* gear box *மொத்தமாக கீழே விழுந்து,* bus stand*-ல் விபத்து ஏற்பட்ட நிலைமையெல்லாம் நடந்தது. அப்படிப்பட்ட பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளில் மக்களை பயணிக்கச் செய்ய வேண்டும். ஏற்கெனவே, பயன்பாட்டில் இருந்த 503*F, N*10 போன்ற பேருந்துகள் நீண்டகாலமாக* service*-ல் பயன்பாட்டில் இருந்தன. அந்த 2 பேருந்துகளும், தற்பொழுது நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல, கயத்தாறிலிருந்து கோவில்பட்டிக்கு வருகின்ற நேரத்தில், நான்குவழிச் சாலையில் சர்வீஸ் சாலையில் ½ கிலோ மீட்டர் தாண்டி ஆசூர் என்ற ஊருக்குப் புதிதாக ஒரு பேருந்தினை இணைப்பாகக் கேட்டிருந்தேன். அதிகாரிகளெல்லாம் ஆய்வு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பள்ளிக்குச் செல்கின்ற மாணவச் செல்வங்கள் நான்குவழிச் சாலையைக் கடந்து வருகின்ற நேரத்தில், விபத்துகள் ஏற்படுகின்றன. ½ கிலோ மீட்டர் தூரம் சாலை வசதி இருக்கின்றது. கயத்தாறிலிருந்து கோவில்பட்டி செல்கிறபோது, ஆசூர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன வேண்டும், திரு. ராஜூ சொல்லுங்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *ஆசூர் என்ற அந்தக் கிராமத்திற்கு உள்ளே சென்று வருவதற்கு 86*B *பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொரோனா.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர்கள் திராவிட மாடல் அடையாளத்தைக் காட்டியிருக்கிறார்கள், அவ்வளவுதான். திராவிட மாடல் அடையாளம். (சிரிப்பு) கொரோனா பாதுகாப்புக்காக வாயில் கட்டிய கருப்புத் துணி திராவிட மாடல் உடையது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் குறிப்பிட்ட, ஆசூர் வழித்தடம் குறித்து எழுத்துப்பூர்வமாகக் கொடுத்தால், அதிகாரிகளிடத்திலே அளித்து விரைவிலே நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, அவர் பேருந்துகள் பழுதடைந்த விஷயங்களை எல்லாம் சொன்னார். நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையிலே கூறியிருந்தேன். குற்றச்சாட்டு கூறியதாக ஆகிவிடும். கடந்த 10 ஆண்டுக் காலத்தில் 14,000 பேருந்துகள்தான் வாங்கியிருந்தீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வாங்கியதுபோல், கூடுதல் பேருந்துகள் வாங்கி இருந்தால், இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காது. அதையெல்லாம், மாற்றுவதற்குத்தான் இப்போது 2,000 பேருந்துகள் வாங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதேபோல், ஒன்றிய அரசு 15 ஆண்டுகள் ஓடிய பேருந்துகளை அகற்றச் சொல்லியிருக்கிறது. இதையெல்லாம் மாற்றும்பொழுது இந்தப் பிரச்சனைகள் தீரும் என்பதைத் தெரிவித்து, விரைவிலே அந்தப் பள்ளி மாணவர்களுக்கான பேருந்து குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*